# இஸ்லாம்

# DRAFT

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் - 1

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கானது)

முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் திணைக்களம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

மின்னஞ்சல் : info@nie.lk
இணையத்தளம் : www.nie.lk

**இஸ்லாம்**
**முதலாம் தரம்**
**ஆசிரியர் வழிகாட்டி**

முதற் பதிப்பு 2015

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN:

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் திணைக்களம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்களின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை ஆகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.

- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைசெயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்புசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.
  அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.
  பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்
  செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வு கூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களை பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;

- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்துதலாகும். எனவே, ஆசிரியர்களது, கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு

வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;

- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;

- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள 4A க்களில் (உளப்பாங்கு (Attitude), பகுப்பாய்வு (Analysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Accountability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பொருத்தமானதும் சாதகமானதுமான உளப்பாங்குகளுடன் ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று பகுப்பாய்வு செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); பொறுப்புக் கூறலை (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கும் விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் குணபால நாணயக்கார
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய. கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும் :** கல்விசார் அலுவல்கள் சபை, தே.க.நி

**ஆலோசனை** : **சங்கைக்குரிய.கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
**திரு.கே.ஏ.டீ.பீ.பி. சரத்சந்திர,**
பணிப்பாளர் (முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வி)
தேசிய கல்வி நிறுவகம்.
**ஜனாப் இஸட். தாஜுதீன்**
கல்விப் பணிப்பாளர் (இஸ்லாம் சமயம் மற்றும் விழுமியங்கள்)
கல்வி அமைச்சு
**மௌலவி எம்.ஐ.எம். நௌபர்தீன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி அமைச்சு

**பாட இணைப்பாக்கம்**
: **திருமதி. நதி அமா ஜயசேகர,**
கல்வியியலாளர் தேசிய கல்வி நிறுவகம்
**திருமதி கே.ஆர்.எம்.சகுந்தலா ரணசிங்க**
உதவி விரிவுரையாளர், முன்பிள்ளை விருத்தி மற்றும்
ஆரம்பக்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

**உள்ளக வளவாளர்**
: **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**வெளியக வளவாளர்கள்** -

**எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வு பெற்ற ஆசிரியர்.

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி**
ஆசிரிய ஆலோசகர், மினுவாங்கொடை கல்வி வலயம்

**மௌலவி எம்.ஐ. ஹச்சி முஹம்மது**
ஆசிரிய ஆலோசகர், சம்மாந்துறை கல்வி வலயம்

**திருமதி. அல்லாபிச்சை ஜனுல்பாதிமா**
ஆசிரியர், கொ/முஸ்லிம் மகளிர் கல்லூரி

**திருமதி.ஜீ.எம்.எம். றசூல்டீன்**
ஆசிரியர், கொ/அல்-ஹிக்மா கல்லூரி

**திருமதி.யெஸ்மின் நிஹார்**
ஆசிரியர், கொ/ஸஹிரா கல்லூரி

பாடப்பதிப்பு - **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

## இஸ்லாம் - ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனை

இஸ்லாம் என்பது வாழ்க்கை முறையாகும். எனவே இப்பாடம், வாழ்க்கைக் கோலத்தைப் பயிலும் ஒரு பாடமாகவே அமைந்துள்ளது. இளஞ்சந்ததியினர் வெவ்வேறு நிறுவனங்களினூடாக இஸ்லாம் பாடத்தைக் கற்கின்றனர். எனினும் ஆசிரியரின் வழிகாட்டலுடன் நிகழுகின்ற பரஸ்பர தொடர்பாடலைக் கொண்ட பாடசாலைக் கற்றல் - கற்பித்தற் செய்முறையினூடாக இஸ்லாம் சமயத்தை மாணவரது உள்ளங்களில் பதிப்பதும் அதனை அவர்களது நாளாந்த வாழ்க்கையுடன் இணைப்பதும் இலகுவானதாகும்.

தற்கால சமூகச் சூழ்நிலையில் சமயக் கல்வியின் தேவை பெரிதும் உணரப்படுகின்றது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையின்படி சமயம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த தேர்ச்சிகளும் தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையில் இடம்பெற்றுள்ள ஏனைய தேர்ச்சிகளை விருத்தி செய்வதிலும் இஸ்லாம் சமயம் பாரிய பங்களிப்பைச் செய்யுமுடியும். எனவே தேசிய கல்வி ஆணைக்குழு எதிர்பார்க்கும் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கும், அதனூடாக பொதுக் குறிக்கோள்களை அடையத்தக்க வகையிலும் ஆரம்பக் கல்விப் பருவத்தில் இஸ்லாம் பாடத்துக்குரிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**ஆரம்பப் பிரிவிற்கான பொதுக் குறிக்கோள்கள்.**

**தரம் - 1 பொதுக் குறிக்கோள்கள்.**

- அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்தி வருவார்.
- அர்கானுல் ஈமான் பற்றி விளங்கி, தானும் செயற்படுத்தி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.
- அர்க்கானுல் இஸ்லாத்தை ஏற்று நடப்பார்.
- நடைமுறை வாழ்வில் முஸ்லிம்கள் பின்பற்றி வரவேண்டிய ஆரோக்கிய வழிமுறைகளை அறிந்து கடைப்பிடித்து வருவார்.
- வாழ்வில் முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தைப் பேணி வருவார்.
- கூட்டு வாழ்வில் இடம்பெற வேண்டிய பண்புகளையும் விழுமியங்களையும் விளங்கி அதன்படி ஒழுகுவார்.
- நபி (ஸல்) அவர்கள் மீது நேசம் கொண்டு அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி நடப்பார்.
- அல்குர்ஆனைப் பற்றி அறிந்து அதனை ஓதிவருவதுடன் அதன் போதனைகளையும் கடைப்பிடித்து ஒழுகுவார்.
- மஸ்ஜித் முஸ்லிம்களின் புனிதமான இடம் எனக் கூறுவார்.
- இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அறிஞர்களின் செயற்பாடுகளை நயந்து அவற்றின் முன்மாதிரிகளைக் கடைப்பிடித்து நடப்பார்.

இஸ்லாம் பாடத்திட்டத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல் மாணவருக்கு வழங்கப்படும். எதிர்பார்க்கப்படும் சிறப்புக் குறிக்கோள்களை அடைவதற்குரிய செயற்பாடுகள் ஆசிரியர் வழிகாட்டியில் பிரேரிக்கப்பட்டுள்ளன. அச்செயற்பாடுகளையும் பாடநூலில் தரப்பட்டுள்ள விடயங்களையும் பொருத்தமானவாறு சேர்மானஞ் செய்து கற்றல் - கற்பித்தல் உத்திகளை ஆக்கபூர்வமாகத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

சமயக் கிரியைகளை உள்ளடக்கிய சமய வாழ்க்கையுடன் தொடர்புடைய செயற்பாடுகளைப் பெருமளவில் பயன்படுத்துதலைப் பிரதான கற்றல் - கற்பித்தல் முறையாகக் கொள்வதைத் தூண்டும் வகையில் அச்செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே இருப்பிட வேலைகள் குறைவானவையும் மாணவருக்குக் களிப்பூட்டத்தக்கவையுமான செயற்பாடுகளை அதிகமாகப் பயன்படுத்தலே தரம் 1 இல் எதிர்பார்க்கப்படுவதாகும்.

1-5 வரையான ஆரம்ப பிரிவில் இஸ்லாம் தொடர்பான கற்றல் அனுபவங்களை பெறும் மாணவர்கள் ஆரம்ப பிரிவு முடிவில் பொதுக் குறிக்கோள்களை அடைவது எதிர்பார்க்கப்படுகின்றது.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைமை**

ஆரம்பப் பிரிவில் இஸ்லாம் கற்பிக்கும் போது மாணவர்கள் விரும்பும் செயற்பாடுகள் அதிகமாகத் தேவைப்படும் சமய சுற்றுலாக்கள், மஸ்ஜீத் பார்வையிடல் மேலும் ஒழுக்க விழுமியங்கள் பிரதானமானவையாகும்.

மேலும் இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய நபி(ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் வெளிப்படுத்தும் கதைகள், கற்றல் வளங்களுடன் முன் வைக்க வேண்டும் அது தொடர்பான பாடல், சித்திரம் போன்ற செயற்பாடுகளை முன் வைத்து மாணவர்கள் இஸ்லாம் பாடத்தைக் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தி அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை உறுதிப்படுத்த முடியும்.

**பாடசாலை கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும்------**

சுத்தம், ஒற்றுமை, ஆசிரியர்களைக் கௌரவித்தல், சகோதரத்துவம் ஆகிய இலட்சணங்களின் ஊடாகப் பாடசாலைச் சூழல் மற்றும் கலாச்சாரம் அழகு பெறுகின்றது. இதன் ஊடாகக் இஸ்லாமிய தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்ள முடியும். இதன் ஊடாகக் கற்ற அனைத்தையும் எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது

**கணிப்பீடு**

ஆரம்ப பிரிவில் முறையான எழுத்துப் பரீட்சை ஒன்றைவிட முறைமை வகையில் செய்யும் மதிப்பீடுகளுக்கே முன்னுரிமையளித்தல் வேண்டும். இவற்றிற்கு அவதானித்தல், ஆராய்தல், பார்வையிடல், அபிநயம், நாடகம், கலந்துரையாடல், வாய்மொழி வினாக்கள் போன்றவையே பொருத்தமானவையாகும்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக் குழு | vi |
| ஆசிரிய வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனை | vii |
| பாடத்திட்டம் | xi |
| கற்றல் - கற்பித்தல் வழிகாட்டல் | 1 |

# பாடத்திட்டம்

# அறிமுகம்

தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளிடையே, சமய மற்றும் விழுமியங்களுக்குரிய தேர்ச்சிகளைப் பிள்ளைகளிடையே கட்டியெழுப்புவது சமய பாடத்தின் பொறுப்பாகும்.

சிறு குழந்தையின் பிஞ்சு மனதிலே புதியதோர் விடயத்தை விதைப்பது இலகுவான விடயமாகும். அவ்வாறே நற்பழக்க வழக்கங்களுக்குப் பிள்ளைகளை இசைவுபடுத்துவதும் இலகுவில் ஆற்றக் கூடியவொன்றாகும். சிறு பிள்ளைகளில் காணப்படும் பண்புகளுக்குப் பொருந்தும் வகையில் இங்கு பல்வேறு செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாட உள்ளடக்கத்திற்குப் பொருத்தமாகப் பிள்ளைக்கு உரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொடுத்து, கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்கு அச்செயற்பாடுகள் உங்களுக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது மட்டுமன்றி நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்வதன் அடிப்படையில் மரணத்திற்குப் பின்பும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்குச் சமயத்தினை கற்பிப்பது சந்தேகமின்றிப் பயனளிக்கும்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடத்திலிருந்தே சிறந்த சமூகமொன்றினைக் கட்டியெழுப்பும் அடிப்படையினை ஆரம்பித்தல் வேண்டும். இவ் விடயத்திற்கான பாரிய பங்களிப்பினைப் பொறுப்பேற்றிருக்கும் அதிர்ஷ்டசாலி ஆசிரியர் நீங்களாவீர்கள். ஆகவே உங்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பினை மேலாக மதிக்கின்றோம்.

# தேசிய கல்வி முறைமைக்கான குறிக்கோள்கள்

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயாரப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளரத்தல்.

**தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### i. தொடர்பாடல் தேரச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### ii. ஆளுமை விருத்தி தொடர்பான தேரச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### iii. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

| | |
|---|---|
| பௌதிகச் சூழல்: | இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. |

**iv. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள். பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல். அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**v. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்


**vi. விளையாட்டு மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் பற்றிய தேர்ச்சிகள்**


அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் மேலும் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**vii. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேரச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

# ஆரம்பக் கல்விப் பாடத்திட்டம்



## நேர ஒதுக்கீடு

## முதலாவது முதன்மை நிலை (தரம் 1, தரம் 2)

| | பாடம் | வாரத்திற்கான நேரம் |
|---|---|---|
| 1. | தாய்மொழி | 5 மணித்தியாலங்கள் |
| 2. | கணிதம் | 3 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் |
| 3. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் |
| 4. | சமயம் | 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் |
| 5. | இரண்டாவது தேசிய மொழி | 30 நிமிடங்கள் |
| 6. | காலைக்கூட்டமும் சமய அனுட்டானமும் | 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் (நாளைக்கு 15 நிமிடம்) |
| 7. | ஓய்வு (இடைவேளை) | 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் (நாளைக்கு 15 நிமிடம்) |
| 8. | உணவு வேளை | 50 நிமிடங்கள் (நாளைக்கு 10 நிமிடம்) |
| 9. | உடலியக்கச் செயற்பாடுகள் | 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள்<br>(நாளைக்கு 20 நிமிடங்கள்) |
| 10. | இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் (வாராந்தம் 1 நாள்) |
| | **வாரத்திற்கான மொத்த நேரம்** | **21 மணித்தியாலங்கள் 15 நிமிடங்கள்** |

# பாடக் குறிக்கோள்

01. பிள்ளையின் மனதில் அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.

02. அல்லாஹ்தஆலாவினால் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட அல்குர்ஆனுக்கு உரிய மரியாதையை வழங்குவதற்கும் அதன்படி வாழ்க்கையை நெறிப்படுத்தவும் வழிப்படுத்தல்.

03. ஈமான் (நம்பிக்கை) கொள்ள வேண்டிய ஆறு விடயங்களை ஏற்று அதன்படி நடக்க வழிகாட்டுதல்.

04. நபியவர்கள் மற்றும் ஸலபுஸ், ஸாலிஹீன் என்பவர்களின் வாழ்க்கை முன்மாதிரிகளை பின்பற்றி அதன்படி வாழ்வதற்கான வழிமுறைகளைக் கட்டியெழுப்புதல்.

05. இஸ்லாமிய பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து முஸ்லிம்களின் பண்புகளை வெளிப்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்

06. திக்ர், அவ்ராத் மற்றும் சூறாக்களை சரியான முறையில் உச்சரித்து ஓதுவதற்கும் நம்பிக்கையுடன் சமய அனுட்டானங்களில் பங்குபற்றுவதற்கும் பயிற்சி வழங்குதல்.

07. மஸ்ஜித் அல்லாஹ்வின் மாளிகை என்பதனை ஏற்று அதனை கௌரவிப்பதற்கு ஊக்குவித்தல்.

08. இஸ்லாம் கற்றுக் கொடுத்துள்ளபடி இஸ்லாமிய நெறிமுறைக்கமைய அனைவருக்கும் அன்பு செலுத்துதல், உதவி செய்தல், அயலவருடன் ஒற்றுமையுடன் வாழ்தல் சம்பந்தமான அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல்

09. நோன்பு நோற்பதன் நோக்கமும் அதன் பெறுமதியும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் முக்கியத்துவமும் சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 1.0<br>அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவு படுத்தல் | 1.0<br>அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவு படுத்தி ஒழுகுவார். | 1.1 பஸ்மலா கூறுதல்<br>• பஸ்மலாவை சரியாக உச்சரித்தல்<br>• பஸ்மலாவை சொல்லும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளல்.<br>- உண்ணும் போது<br>- உறங்கும் போது<br>- வீட்டினுள் நுழையும் போது<br>- ஓதுவதற்கு முன்<br>- படிப்பதற்கு முன் |
| | | 1.2 அல் இஸ்திஆதா கூறுதல்<br>• அல் இஸ்திஆதாவை சரியாக உச்சரித்தல்<br>• அல் இஸ்திஆதா சொல்லும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளலும் கூறுதலும்.<br>- காவல் தேடும் போது<br>- தீய எண்ணங்கள் உருவாகும் போது<br>- கொட்டாவி விடும் போது<br>- பாவகாரியங்களில் ஈடுபட மனம் தூண்டும் போது |
| | | 1.3 மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களில் அத்தஹ்மீத் கூறல்<br>• அத்தஹ்மீத் சரியாக உச்சரித்தல்<br>• அத்தஹ்மீத் சொல்லும் சந்தர்ப்பங்களை அறிந்து கூறுதல்<br>- அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லும் போது<br>- ஏனையவர்களின் பாராட்டை ஏற்கும் போது<br>- அல்லாஹ்வின் ஆற்றல்களை விளக்கும் போது |
| | | 1.4 அல்லாஹ்வை நினைவு படுத்தும்போது அத்தஹ்லீல் கூறுதல்<br>• அத்தஹ்லீலை சரியாக உச்சரித்தல்<br>• அத்தஹ்லீலை சொல்லும் சந்தர்ப்பங்களை அறிந்து கூறுதல்<br>- அல்லாஹ்வை திக்ரு செய்யும் போது<br>- வணக்கத்திற்குரியவனாக பிரகடனப்படுத்தும் போது |

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 2.0<br>அர்க்கானுல் ஈமான் | 2.0<br>அர்க்கானுல் ஈமான் பற்றி விளங்கி தானும் செயற்படுத்தி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவர். | 2.1 அர்க்கானுல் ஈமான்<br>• அல்லாஹ்வை ஈமான் கொள்ளல் |
| 3.0<br>அர்க்கானுல் இஸ்லாம் | 3.0<br>அர்க்கானுல் இஸ்லாத்தை ஏற்று நடப்பார். | 3.1அல் கலிமதுத் தையிபாவை<br>• சரியாக உச்சரித்தலும் மனனமிடலும். |
| 4.0<br>அத்தஹாரா | 4.0<br>நடைமுறை வாழ்வில் முஸ்லிம்கள் பின்பற்றி வரவேண்டிய ஆரோக்கிய வழிமுறைகளை அறிந்து கடைப்பிடித்து வருவார். | 4.1 உடற் சுத்தம்<br>• கை, கால், முகம், பல் முதலிய உறுப்புக்களைச் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தை அறிதல். |
| | | 4.2 சூழல் சுத்தம்<br>• சூழல் சுத்தம் வீட்டையும், சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தை அறிதல்<br>• வகுப்பறையை சுத்தமாக வைத்திருத்தல் |
| 5.0<br>வாழ்வின் ஒழுக்கங்கள் | 5.0<br>முஸ்லிம்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பேணி வருவார். | 5.1 உண்ணல், பருகல் ஒழுக்க முறைகள்<br>• உண்ணும் போது இரு கைகளையும் கழுவுதல்<br>• சுத்தமான விரிப்பில் உணவுப் பாத்திரத்தை வைத்தல்<br>• பிஸ்மி கூறுதல்<br>• வலது கையால் உணவு உண்ணுதல், பருகுதல்<br>• தமக்கு அருகில் உள்ள பகுதியிலிருந்து உண்ண ஆரம்பித்தல்<br>• சிந்தாமல் உண்ணுதல்<br>• சிறு கவளங்களாக எடுத்து உண்ணுதல்<br>• சுத்தமான விரிப்பில் சிந்தும் பருக்கைகளை எடுத்து உண்ணுதல்<br>• நீர் அருந்தும் போது மிடர் மிடராக குடித்தல்<br>• அல்ஹம்துலில்லாஹ் என அல்லாஹ்வை புகழ்தல் |

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | | 5.2 உடை அணியும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தல்<br>• உடை அணியும் முன் அதனை உதறுதல்<br>• வலப் பக்கத்தை முற்படுத்தல், அழகாகவும் நேர்த்தியாகவும் அணிதல்<br>• உடை களையும் போது இடப்பக்கத்தை முற்படுத்தல்<br>• களைந்த உடைகளை ஒழுங்காக வைத்தல்<br>• உரிய இடத்தில் உடைகளை வைத்தல் துஆக்களை மனனமிட்டு ஓதுதல் |
| 6.0<br>அக்லாக், ஆதாத் | 6.0<br>கூட்டு வாழ்வில் இடம்பெற வேண்டிய பண்புகளையும் விழுமியங்களையும் (அக்லாக்,ஆதாத்) விளங்கி அதன்படி ஒழுகுவார். | 6.1 கிட்டிய உறவினர்களை மதித்து அன்பு செலுத்துதல்<br>• பெற்றோர், சகோதரர், கிட்டிய உறவினர்கள் ஆசிரியர்களுக்கு அன்பு செலுத்தி அவர்களின் நல் உபதேசங்களை ஏற்று நடத்தல்<br>• பெற்றோர், சகோதரர், கிட்டிய உறவினர்களுக்குக் கீழ்ப்படிவதன் அவசியத்தையும் முறையினையும் அறிந்து ஒழுகுதல். |
| | | 6.2 சேர்ந்து வாழ்தல்<br>• மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்தல்<br>• பகிர்ந்து கொள்ளல்<br>• ஒற்றுமையாக இருத்தல் |
| 7.0<br>நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் | 7.0<br>நபி (ஸல்) அவர்களின் மீது நேசங் கொண்டு அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி நடப்பார். | 7.1 முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் பிறத்தல்<br>• அவரது பெற்றோர் அப்துல்லாஹ், ஆமினா முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள்<br>• அஸ்ஸாதிக் (உண்மையாளர்)<br>• அல் அமீன் (நம்பிக்கைக்கு உரியவரர்)<br>• அவர் மீது ஸலவாத்து சொல்லல் |

| தொனிப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 8.0<br>அல்குர்ஆன் | 8.0<br>அல்குர்ஆனைப்பற்றி அறிந்து அதனை ஓதி வருவதுடன் அதன் போதனைகளையும் கடைப்பிடித்து ஒழுகுவார். | 8.1 அல்குர்ஆன் அல்லாஹ்வினால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டது.<br>• அல்குர்ஆன் பற்றிய அறிமுகம்<br>• அல்குர்ஆனை ஓதுதல்<br>• ஸூரத்துல் பாத்திஹா |
| 9.0<br>மஸ்ஜித் | 9.0<br>'மஸ்ஜித்' என்பது முஸ்லிம்களின் புனிதமாக இடம் எனக் கூறுவார். | 9.1 மஸ்ஜித் என்பது அல்லாஹ்வின் மாளிகை, தொழுகையை நிறைவேற்றும் ஓர் இடம்<br>• மஸ்ஜித் பரிசுத்தமான இடம் என விளக்குதல்<br>• மிம்பர், மிஃராப் |
| 10.0<br>இஸ்லாமிய வரலாறு | 10.0<br>இஸ்லாமிய வரலாற்றில் தோன் றிய அறிஞர்களின் செயற்பாடு களை நயந்து அவர்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடித்து நடப்பார். | 10.1 இமாம் கஸ்ஸாலி(றஹ்) அவர்கள்<br>• இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கற்கச் சென்றமை |

# கற்றல் - கற்பித்தலுக்கான வழிகாட்டல்

**1. தொனிப்பொருள் : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்துதல்.**

**தேர்ச்சி** 1.0 : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்தி ஒழுகுவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.1 : பொருத்தமான சந்தர்ப்பங்களில் பஸ்மலா கூறுவார்.

**கற்றற் பேறு** :

- பஸ்மலாவை சரியாகவும் முழுமையாகவும் உச்சரிப்பார்.
- பஸ்மலாவின் கருத்தினைக் கூறுவார்.
- பஸ்மலாவைப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் கூறுவார்.
- அனைத்து நற்செயல்களையும் பஸ்மலா பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் எனக் கூறி ஆரம்பிப்பார்.

**வளங்கள்** :

- பஸ்மலா அறபியில் எழுதப்பட்ட அட்டை
- பஸ்மலா ஒலிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டு அல்லது பொருத்தமான முறையொன்றைப் பயன்படுத்தவும்
- நிறக் கடதாசி, பசை

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்** :

**செயற்பாடு 1** :

- பஸ்மலாவை சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்குக.
- பஸ்மலா அரபியில் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
- பஸ்மலாவைத் தெளிவாக உச்சரித்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க (பஸ்மலா ஒலிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டு) பஸ்மலா குழுவாகவும் தனித்தனியாகவும் உச்சரிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு 2** :

- பஸ்மலாவின் கருத்தை விளக்குக
- பஸ்மலா சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களைப் பற்றிக் கலந்துரையாடுக
- மாணவருடன் சேர்ந்து பின்வரும் பாடலைப் பாடுக

**பிஸ்மில்லாஹ் பிஸ்மில்லாஹ்**
**உண்ணும்போது பிஸ்மில்லாஹ்**
**எழுதும்போது பிஸ்மில்லாஹ்**
**நற்செயல் அனைத்திற்கும் பிஸ்மில்லாஹ்**

**செயற்பாடு 3 :** • பிஸ்மில்லாஹ் என்பதை அரபியில் பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துக. மீண்டும் அப்பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.
அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் விதத்தில் எழுதப்பட்ட அட்டையை நிறக் கடதாசி கொண்டு ஒட்டுதவதற்கு வழிப்படுத்துக.

**கணிப்பீடு :**

- பஸ்மலா எழுதப்பட்ட அட்டையை அழகுபடுத்துவதில் ஒற்றுமையுடன் செயற்படுவார்
- அழகுபடுத்திய அட்டையைச் சுவரில் தொங்கவிடுவார்.
- பஸ்மலா கூறி வகுப்பில் அனைத்து வேலைகளையும் ஆரம்பிப்பார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- அன்றாட வாழ்கையில் அனைத்து நற்காரியங்களிலும் பஸ்மலா கூறுவார்.

**1. தொனிப்பொருள் : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்துதல்.**

**தேர்ச்சி 1.0 : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பத்திலும் அவனை நினைவுபடுத்தி ஒழுகுவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2** : பொருத்தமான சந்தர்ப்பங்களில் அல் இஸ்திஆதா கூறுவார்.

**கற்றற் பேறு** :

- அல் இஸ்திஆதாவை திருத்தமாகவும், முழுமையாகவும், சத்தமாகவும் உச்சரிப்பார்.
- அல் இஸ்திஆதாவின் கருத்தைத் தெரிவிப்பார்.
- அல் இஸ்திஆதா கூறும் சந்தர்ப்பங்களில் அல் இஸ்திஆதாவைக் கூறுவார்

**வளங்கள்** :

- அல் இஸ்திஆதா அறபியில் எழுதப்பட்ட அட்டை
- அல் இஸ்திஆதா ஒலிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டு (அல்லது பொருத்தமான முறையொன்று பயன்படுத்துக)
- ''அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம்'' என அரபியில் எழுதப்பட்ட சிறிய கடதாசிக் கீலங்கள் (மாணவருக்கு ஒன்று வீதம்)
- சித்திரம் வரைவதற்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- அல் இஸ்திஆதா சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்குக.
- அல் இஸ்திஆதா அறபியில் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
  (அல் இஸ்திஆதாவை மாணவர்கள் அறபியில் எழுதத் தேவையில்லை.)
- அல் இஸ்திஆதா என்பது **'அஊதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர்ரஜீம்'** என்பதன் சுருக்கம் என்பதைக் கூறுக.
- அல் இஸ்திஆதா பதியப்பட்ட இறுவட்டை ஒலிக்கச் செய்து மாணவர்களைச் செவியேற்கச் செய்க.

செயற்பாடு 2

- அல் இஸ்திஆதாவைத் தனியாகவும், குழுவாகவும் கூறுவதற்கு வழிப்படுத்துக.
- அல் இஸ்திஆதாவின் கருத்தைத் தெளிவுபடுத்துக.
- அல் இஸ்திஆதா கூறவேண்டிய சந்தர்ப்பங்களைக் கலந்துரையாடுக.
  உ-ம் : - காவல் தேடும்போது,

- தீய எண்ணங்கள் உருவாகும் போது,
- கொட்டாவி விடும்போது,
- பாவகாரியங்களில் ஈடுபட மனம் தூண்டும்போது,

செயற்பாடு 3 :
- ‘அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்’ என அரபியில் எழுதப்பட்ட சிறிய கடதாசிக் கீலங்கள் சித்திரம் வரைவதற்கான கடதாசி என்பவற்றை வழங்குக.
- சித்திரக் கடதாசியில் மேல் மூலையில் சிறிய கடதாசிக் கீலங்களை ஒட்டி அல் இஸ்திஆதா கூறும் சந்தர்ப்பம் ஒன்றை நடித்துக்காட்ட அறிவுறுத்துக.

**கணிப்பீடு**
- அல் இஸ்திஆதாவை திருத்தமாகவும் பூரணமாகவும் உச்சரிப்பார்.
- அல் இஸ்திஆதா கூறவேண்டிய சந்தர்ப்பத்தைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**
- அன்றாட வாழ்வில் நற்செயல்கள் அனைத்தையும் அல் இஸ்திஆதா பஸ்மலா கூறி ஆரம்பிப்பார்.

**1. தொனிப்பொருள் : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்துதல்.**

**தேர்ச்சி 1.0** : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்தி ஒழுகுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : பொருத்தமான சந்தர்ப்பங்களில் தஹ்லீல் கூறுவார்.

**கற்றற் பேறு** :

- அல்ஹம்துலில்லாஹ் என்ற சொற்றொடரைச் சரியாக உச்சரிப்பார்
- அல்ஹம்துலில்லாஹ் என்பதன் கருத்தை அறிந்து கூறுவார்.
- உரிய சந்தர்ப்பங்களில் அல்ஹம்துலில்லாஹ் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவார்.

**வளங்கள்** :

- அல்ஹம்துலில்லாஹ் என்று அறபியில் எழுதப்பட்ட நிற அட்டைகள்
- கத்தரிக்கோல் (குழுவிற்கு ஒன்று வீதம்)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

செயற்பாடு 1 :

- அல்ஹம்துலில்லாஹ் என்று அரபியில் எழுதிய சொல் அட்டையை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
  (அல்ஹம்துலில்லாஹ் என்ற சொற்றொடரை அரபியில் மாணவர் எழுதத் தேவையில்லை.)
- அல்ஹம்துலில்லாஹ் என்ற அறபுச் சொல்லை மாணவர்கள் குழுவாகவும் பின்னர் தனித் தனியாகவும் உச்சரிக்கச் செய்க.

செயற்பாடு 2 :

- அல்ஹம்துலில்லாஹி என்ற அறபுச் சொற்றொடரை அட்டையில் எழுதிப் பகுதிகளாக வெட்டுக. (சிக் செக்) அதில் ஒரு தொகுதியை மாணவ குழுக்களுக்கு வழங்குக.
- மாணவர்கள் மேசை மீது அல்ஹம்துலில்லாஹ் என்ற சொல்லை சரியாகப் பொருத்துவதற்கு வழிப்படுத்துக.
- தமது வேலை நிறைவடைந்த பின்னர் அல்ஹம்துலில்லாஹ் என்று சத்தமாகக் கூறச் செய்க.

செயற்பாடு 3 :

- மாணவர்களை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் சென்று மாணவர்களை அரை வட்டமாக நிறுத்தி அல்ஹம்துலில்லாஹ் என்ற சொல்லின் கருத்தை மாணவருடன் கலந்துரையாடுக.
- அல்ஹம்துலில்லாஹ் கூறும் சந்தர்ப்பங்களை முன்வைக்க.
  உ-ம் : * மற்றவர்கள் நலனைப் பாராட்டும் போது,

* அல்லாஹ்வின் அருட்கொடைகள் கிடைக்கும் போது,
* துன்பங்கள் அகலும் போது,
* தேவைகள் நிறைவேறும் போது,

- அன்றாட வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகள் சிலவற்றைக் கூறி அச் சந்தர்ப்பங்களில் அல்ஹம்துலில்லாஹ் கூற வழி அமைத்துக் கொடுக்க.

  உ-ம் : * நீர் பரீட்சையில் நல்ல முறையில் சித்தியடைந்துள்ளீர்.....
  * பாருங்கள் அழகாகச் சூரியன் உதித்துள்ளது........
  * சுகயீனமுற்றிருந்த மாமா குணமடைந்துள்ளார்.....
  * நாம் இன்று சந்தோசமாகக் கற்றுக் கொண்டோம் தானே

**கணிப்பீடு :**

- பல தொகுதிகளாக வேறாக்கிய கடதாசிக் கீலங்களை இணைத்து அல்ஹம்துலில்லாஹ் என்ற சொற்றொடரைக் கட்டியெழுப்புவார்.
- அல்ஹம்துலில்லாஹ் என்ற சொற்றொடரைச் சரியாகவும் முழுமையாகவும் உச்சரிப்பார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- மகிழ்ச்சிக்கு உள்ளான சந்தர்ப்பங்களில் அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறி அல்லாஹ்வை புகழ்வார்.

**1. தொனிப்பொருள் : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்துதல்.**

**தேர்ச்சி 1.0** : அல்லாஹ் இருப்பதை ஏற்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனை நினைவுபடுத்தி ஒழுகுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : பொருத்தமான சந்தர்ப்பங்களில் தஹ்லீல் கூறுவார்.

**கற்றற் பேறு** :

- தஹ்லீல் என்பது 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்று கூறுவதை குறிக்கும் என்பதை அறிந்து கூறுவார்.
- லாஇலாஹ இல்லல்லாஹ்' என்பதனைச் சரியாக உச்சரிப்பார்.
- லாஇலாஹ இல்லல்லாஹ்' என்பதன் கருத்தை அறிந்து கூறுவார்.
- அல்லாஹ்வை திக்ர் செய்பவற்றுள் தஹ்லீலும் ஒன்று எனக் கூறுவார்.
- வணக்கத்துக்குரியவனாக பிரகடனப்படுத்துவதற்காக தஹ்லீல் கூறுவார்.
- எல்லாச் சந்தர்ப்பத்திலும் 'லாஇலாஹ இல்லல்லாஹ்'எனக் கூறுவார்.

**வளங்கள் :**

- லாஇலாஹ இல்லல்லாஹ்' என்று அரபியில் எழுதப்பட்ட சொல் அட்டை

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற சொற்றொடரைப் பக்தியுடன் கூறிப் பாடத்தை ஆரம்பிக்குக.
  (லாஇலாஹ இல்லல்லாஹ்' எனும் பதத்தை மாணவர்கள் அறபியில் எழுத வழிப்படுத்த வேண்டியதில்லை)
- லாஇலாஹ இல்லல்லாஹ்' என்று எழுதப்பட்ட சொல் அட்டையை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற அறபுச் சொற்றொடரை மாணவர்கள் குழுவாகவும் தனித் தனியாகவும் உச்சரிக்கச் செய்க.

**செயற்பாடு 2:**

- லா இலாஹா இல்லல்லாஹா முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்பதன் பொருளைச் சொல்லிக் கொடுக்க. (வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்)
- அத் தஹ்லீல் என்பது 'லாஇலாஹ இல்லல்லாஹ்' எனப் பொருள்படும் என மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- அத் தஹ்லீல் சொல்லும் சந்தர்ப்பங்களை அறிந்து உதாரணத்துடன் கலந்துரையாடுக.
  - அல்லாஹ்வை திக்ர் செய்யும் போது,

- வணக்கத்துக்குரியவனாக பிரகடனப்படுத்தும் போது......

**செயற்பாடு 3 :**

- மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்க.
- முடியுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வை திக்ர் செய்யும்படி மாணவருக்கு விளக்குக.
- மாணவர்களை வரிசைப் படுத்துக.
- அமைதியான முறையில் வகுப்பறைக்குள் வந்து மெதுவாக லாஇலாஹ இல்லல்லாஹ்' எனக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**கணிப்பீடு :**

- 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற சொற்றொடரைச் சரியாக உச்சரிப்பார்.

**நடைமுறை வாழ்விற்கானவை :**

- 'லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதைத் தமது வாழ்க்கையில் வழக்கப்படுத்திக் கொள்வார்.

**2 தொனிப்பொருள் : அர்கானுல் ஈமான்**

**தேர்ச்சி 2.0** : அர்கானுல் ஈமான் பற்றி விளங்கி, தானும் செயற்படுத்தி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : அல்லாஹ்வை ஏற்று விசுவாசித்து அவனது பண்புகளைக் கூறுவார்.

**கற்றற் பேறு** :

- அல்லாஹ்வின் உள்ளமையைக் கூறுவார்.
- அல்லாஹ் ஒருவன் என்பதை சொல்லிக் காட்டுவார்.
- அல்லாஹ் அனைத்தையும் படைத்தவன் என்பதை எடுத்துக் கூறுவார்.
- அல்லாஹ் அனைத்தையும் பரிபாலிப்பவன் என்பதை எடுத்துக் கூறுவார்.
- அல்லாஹ் அனைத்துக்கும் ஆற்றலுடையவன் என்பதைச் சொல்லிக் காட்டுவார்.

**வளங்கள்:**

- அல்லாஹ் என அரபியில் எழுதப்பட்ட சொல் அட்டை
- அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்வுக்கு நன்றி என்ற பாடல்
- சூழலில் அழகை கட்டியெழுப்புவதற்கு தேவையான (கிளே, களி, வேறு ஏதாவது பொருத்தமான பொருள் அவற்றை கட்டியெழுப்புவதற்கான பலகை)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்று சூழல் அழகைக் காட்டுக (அல்லது அழகான சூழல் காட்சி அடங்கிய படங்களைக் காட்டுக.)
- இவை அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் என்பதைத் தெளிவுபடுத்துக.
- அல்லாஹ்வின் படைப்புகளுக்கு நன்றி கூறிப் பின்வரும் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.

**கதிரவன் ஒளி பரவுதே - பூக்களும் மணம் தந்ததே**
**தென்றல் காற்றும் வீசுதே**
**இவை அனைத்தையும் படைத்தவனாம்**
**எங்கள் ரப்புல் ஆலமீன் அவனை தினம் புகழ்ந்தே -**
**நாம் நன்றி கூறி தொழுதிடுவோம்**

**செயற்பாடு 2 :**

- முன்னைய பாடத்தில் கற்ற பிஸ்மில்லாஹ், அல் இஸ்திஆதா, அல்ஹம்துலில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற சொற்றொடர்களை மாணவர்களுக்கு நினைவுபடுத்துக.
- மேலே கூறப்பட்ட சொற்றொடர்களை மீண்டும் சத்தமாக உச்சரிக்க மாணவர்களை வழிப்படுத்துக.
- அல்லாஹ்வை பற்றிப் பின்வரும் விடயங்களை மாணவருடன் கலந்துரையாடுக.
  * அல்லாஹ் இருப்பதால் அவனது பெயரைச் சொல்கிறோம், அவனைப் புகழ்கின்றோம், அவனிடம் பாதுகாவல் தேடுகின்றோம்.
  * அல்லாஹ் ஒருவன்.
  * அல்லாஹ் அனைத்தையும் படைத்தவன்.
  * அல்லாஹ் அனைத்தையும் பரிபாலிப்பவன்.
  * அல்லாஹ் அனைத்துக்கும் சக்தி உடையவன்.

**செயற்பாடு 3 :**

- சூழலில் காணப்படும் பொருட்கள், மரம், செடி, போன்றவற்றை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் (கிளே, களி, வேறு தேவையான பொருட்கள்) மாணவருக்கு வழங்குக (அனைத்து மாணவர்களையும் பங்கு கொள்ளச் செய்க)
- அல் இஸ்திஆதா பிஸ்மில்லாஹ் கூறித் தாம் விரும்பும் ஏதாவது ஒன்றை உருவாக்குவதற்கு அறிவுறுத்தல் வழங்குக.
- மாணவர்கள் உருவாக்கியவற்றை, பலகையின் மீது வைத்துச் சூழல் காட்சியொன்றை அமைப்பதற்கு வழிப்படுத்துக.
- மாணவர்களின் ஆக்கங்கள் தொடர்பாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தி அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறச் சந்தர்ப்பம் வழங்குக.

**கணிப்பீடு :**

- அல்லாஹ்வின் படைப்புக்களுக்கு நன்றி செலுத்திப் பாடலை பாடுவார்.
- சூழல் காட்சியொன்றை நிர்மாணிப்பதற்கு ஒத்துழைப்பார்

**நடைமுறை வாழ்விற்கானவை**

- அல்லாஹ்வை பற்றிய நம்பிக்கையுடன் அனைத்து காரியங்களிலும் ஈடுபடுவார்.

3. **தொனிப்பொருள் : அர்கானுல் இஸ்லாம்**

**தேர்ச்சி 3.0** : அர்கானுல் இஸ்லாத்தை ஏற்று நடப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.1:** கலிமா மொழிவார்.

**கற்றற் பேறு** :

- ‘ கலிமதுத் தையிபாவை சரியாக உச்சரிப்பார்.
- ‘ கலிமதுத் தையிபாவை மனனமாகக் கூறுவார்.

**வளங்கள்** :

- ‘ கலிமதுத் தையிபா அரபியில் எழுதப்பட்ட அட்டை (சுவரில் தொங்க விடக்கூடியவாறு)
- ‘ கலிமதுத் தையிபா முறையாக உச்சரித்து மொழியப்பட்ட இறுவட்டு தேவையான உபகரணம்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1** :

- ‘ கலிமதுத் தையிபா’ அரபியில் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
  (‘ கலிமதுத் தையிபா’ மாணவர்கள் அரபியில் எழுத வழிப்படுத்தத் தேவையில்லை)
- ‘ கலிமா தையிபாவை’ சரியாக உச்சரித்து மாணவர்கள் செவிமடுக்கச் செய்க.
- ‘ கலிமா தையிபாவை’ குழுவாகவும் தனியாகவும் உச்சரிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயற்பாடு 2 :**

- மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே கூட்டிச் சென்று அரை வட்டத்தில் நிறுத்துக.
- ஒரு மாணவன் தனது வலது பக்கத்தில் இருக்கும் மாணவருக்கு ‘கலிமா தையிபா’ கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- இதே போன்று ‘ கலிமா தையிபாவை’ அனைவரும் கூறுவதற்கும், செவிமடுப்பதற்கும் சந்தர்ப்பம் அளித்து மனனமிடச் செய்க.

**கணிப்பீடு :**

- கலிமா தையிபாவை’ சரியாக உச்சரிப்பார்.
- மனனமாகக் கூறுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- ஈமானின் உறுதிப்பாடாக கலிமாவை நினைவுபடுத்துவார்

**4. தொனிப்பொருள் : அத்தஹாறா**

**தேர்ச்சி 4.0** : நடைமுறை வாழ்வில் முஸ்லிம்கள் பின்பற்றி வரவேண்டிய ஆரோக்கிய வழிமுறைகளை அறிந்து கடைப்பிடித்து வருவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1:** சுத்தம் பேணுவார்.

**கற்றற் பேறு :**

- உடல் உறுப்புக்களை சுத்தமாக வைத்திருப்பதன் அவசியத்தை அறிந்து அவற்றைக் கடைப்பிடிப்பார்.
- உடல் உறுப்புக்களைச் சுத்தமாக வைத்திருப்பார்.

**வளங்கள் :**

- அனைத்து மாணவர்களுக்கும் கைகளைக் கழுவுவதற்குத் தேவையான நீர், சவர்க்காரம்
- சித்திரம் வரைவதற்கும் ஒட்டுவதற்கும் தேவையான கத்தரிக்கோல், பசை, பிரிஸ்டல் மட்டை

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்று பின்வரும் பாடலைப் பாடிக்காட்டுக.

  **பற்பசை பூசி**
  **தூரிகை கொண்டு**
  **காலை மாலை நாமும்**
  **பல் துலக்கி வாழுவோம்**
  **சுத்தம் நாளும் பேணியே**
  **இன்பமாக வாழுவோம்**

- இஸ்லாமிய அடிப்படையில் சுத்தம் பேணுவதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரியும் விதமாகக் கலந்துரையாடுக.
- காலையிலும் மாலையிலும் அசுத்தமான சந்தர்ப்பங்களிலும், விளையாடிய பின்பும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் கை, கால், முகம் கழுவுவதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக.

**செயற்பாடு 2 :**

- இடைவேளையின் போது அனைத்து மாணவர்களையும் வெளியே அழைத்துச் சென்று சவர்க்காரமிட்டு தமது இரு கைகளைக் கழுவுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- சுத்தமான துவாய் ஒன்றின் மூலம் இரு கைகளையும் துடைத்து அதன்பின் உட்கார்ந்து அமைதியாக உண்ணுவதற்குப் பழக்குக.
- இதே போன்று தினமும் சுத்தமாகவும் ஒழுக்கமாகவும் உணவு உண்ண வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கலந்துரையாடுக.

**கணிப்பீடு :**

- கைகளைச் சுத்தமாகக் கழுவி உணவு உட்கொள்ளும் முறைகளை வெளிக்காட்டுவார்
- சுத்தம் தொடர்பான பாடலைப் பாடுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை :**

- ஆரோக்கியமாக வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைக் கையாள்வார்.

4. தொனிப்பொருள் : அத்தஹாரா

**தேர்ச்சி 4.0** : நடைமுறை வாழ்வில் முஸ்லிம்கள் பின்பற்றி வரவேண்டிய ஆரோக்கிய வழிமுறைகளை அறிந்து கடைப்பிடித்து வருவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : சுற்றாடலில் சுத்தம் பேணுவார்.

**கற்றற் பேறு** :

- வீட்டில் உபயோகிக்கும் பொருட்களைச் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் வைத்திருப்பார்.
- வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கும் பணியில் பங்கு கொள்வார்.
- வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருப்பார்.
- வகுப்பறையில் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளையும் உரிய இடத்தில் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பார்.

**வளங்கள்** :

- நேர்த்தியாகக் காணப்படும் வீடு, சுத்தமாக காணப்படும் வீடு முதலியன அடங்கிய நிழற் படங்கள்.
- சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்குத் தேவையான உபகரணங்கள், மரம் நடுவதற்குத் தேவையான உபகரணங்கள்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

செயற்பாடு 1 :

- நேர்த்தியான அழகிய சூழலில் அமைந்த ஒரு வீட்டையும் அசுத்தமான ஒரு சூழலில் அமைந்த நேர்த்தியற்ற ஒரு வீட்டையும் பிரதிபலிக்கும் இரு படங்களைக் காட்சிப்படுத்துக.
- அவ்விரு படங்களில் எது மாணவர்களுக்கு விருப்பமானது என்பதைக் கேட்டறிக.
- வீட்டையும் சுற்றாடலையும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதன் முக்கியத்துவம் பற்றிய இஸ்லாமிய போதனைகளை எடுத்துக் கூறுக. தொழுமிடம் சுத்தமாக இருந்தால் மாத்திரமே அங்கு தொழ முடியும் என்பதை நினைவுபடுத்துக.

செயற்பாடு 2 :

- வீட்டையும் வீட்டிலுள்ள பொருட்களையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைப்பதற்குச் செய்ய வேண்டியவை தொடர்பாக உரையாடுக.
- வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருக்கக் கூடிய வழிவகைகள் பற்றி மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறிக.
- மாணவர்கள் பெற்றோரின் ஒத்துழைப்புடன் வகுப்பறையைச் சுத்தமான அழகான இடமாக வைத்திருப்பதற்கு ஒழுங்கு செய்க.

செயற்பாடு 3 :

- வகுப்பறையையும் வெளிச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியம் பற்றிக் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்க.

- பெற்றோரின் ஒத்துழைப்புடன் ஏற்கனவே பெற்றுக் கொண்ட செடிகளை நாட்டி வகுப்பறை வெளிச் சூழலை அழகாகப் பேணுக.
- தினமும் செடிகளுக்கு நீர் ஊற்றிப் பராமரிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.
- எமது அயற் சூழலிலுள்ள பூமரங்கள் மற்றும் ஏனைய மரங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றிலிருந்து பயன்பெறச் செய்க.

**மரங்கள் தோறும் பூக்களினால்**
**எழிலை எங்கும் தந்திடுதே**
**பூக்கள் முழுதும் பறித்திட்டால்**
**மரங்களின் நிலையும் கவலையே**
**பூச்சியும் பசியால் வாடிடுமே**

**கணிப்பீடு** :

- வகுப்பறையையும் அயற் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- தாம் வாழும் வீடு, வீட்டுச் சூழல் என்பவற்றைச் சுத்தமாக வைத்திருப்பார்.

5. தொனிப் பொருள் : வாழ்வின் ஒழுக்கங்கள்.

**தேர்ச்சி 5.0** : முஸ்லிம்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பேணி வருவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : உணவு உண்ணும் ஒழுங்கைப் பேணுவார்.

**கற்றற் பேறு** :

- உணவு உண்ண முன்னரும் உண்ட பின்னரும் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள்வார்.
- உணவு உண்ணும் போது உட்கார்ந்து உண்ணுவார்.
- உண்ணும் போது பேண வேண்டிய ஒழுங்குகளை பேணி ஓதல்களையும் ஓதுவார்
- உணவு உண்ணுவதும் ஒரு இபாதத் என கூறுவார்

**வளங்கள்** :

- மாணவர்கள் வீட்டிலிருந்து எடுத்து வந்த காலை உணவு குழுவாக சேர்ந்து உண்ணுவதற்குத் தேவையான தட்டு (சஹன்)
- சுத்தமான விரிப்பு (குழுவுக்கு 1 வீதம்)

**செயற்பாடு 1** :

- சாப்பிட முன்னரும், சாப்பிடும் போதும், சாப்பிட்ட பின்பும் கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய ஒழுங்குகளை முறையாக அவதானித்துக் கொள்க.
- சாப்பிடும் போது கடைப்பிடிக்கும் ஒழுங்கு முறைகளை மாணவரிடம் கேட்டறிக.
- சாப்பிட முன்னர், சாப்பிட்டபினனர் ஓதவேண்டிய ஓதல்களைக் கூறப்பழக்குக.

**செயற்பாடு 2** :

- பெற்றோரின் ஒத்துழைப்புடன் மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து உண்ணுவதற்கு ஏற்ற விதமாக வகுப்பறையை ஒழுங்கமைத்து சுத்தமான விரிப்பை விரித்து கைகளைக் கழுவி மாணவர்களை அதில் குழுக்களாக அமரச் செய்க.
- ஆசிரியரின் வழிகாட்டலுடன் இஸ்லாமிய ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்து உண்ணுவதற்கு வாய்ப்பளிக்க (தேவைப்படின் பெற்றோரின் உதவி பெறலாம்)

**கணிப்பீடு** :

- உணவு உண்ண முன்னரும் உண்ட பின்பும் ஓத வேண்டியவற்றை நாளாந்தம் ஓதி இஸ்லாம் கூறும் ஒழுங்கு முறைக்கமைய உணவு உட்கொள்வார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- இஸ்லாமிய ஒழுக்க முறைகளைக் கடைப்பிடித்து உணவு உட்கொள்வார்.

**5. தொனிப்பொருள் : வாழ்வின் ஒழுக்கங்கள்**

**தேர்ச்சி** 5 : முஸ்லிம்கள் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் பேணி வருவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.2: ஆடை அணியும் ஒழுங்கைப் பேணுவார்.

**கற்றற் பேறுகள்** :

- உடை அணிய முன்னரும் உடை அணியும் போதும் அதனைக் களையும் போதும் பேண வேண்டிய ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பார்.
- உடை அணியும் போதும் களையும் போதும் ஓத வேண்டிய துஆக்களை மனனமிட்டுக் கொள்வார்.
- உடைகளை உரிய இடத்தில் ஒழுங்காக வைப்பார்.

**வளங்கள்** :

- சீருடைக்கு மேலால் அணியக் கூடிய பொருத்தமான ஆடை (சேட், சட்டை)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1** :

- மாணவர்கள் உடை அணியும் போது வீட்டில் பேணுகின்ற ஒழுங்குமுறைகள் பற்றிக் கேட்டறிக. உடை அணியும்போதும் களையும் போதும் பேண வேண்டிய ஒழுங்குகளை ஒவ்வொன்றாகச் சொல்லிக் காட்டுக.
- உடை அணியும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைத் தனித்தனியாகக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க.
- உடை அணியும் போதும் களையும்போதும் ஓதுகின்ற துஆக்களை சரியாக மொழிந்து காட்டுக.

**செயற்பாடு 2** :

- மாணவர்கள் ஏற்கனவே கொண்டு வந்த ஆடையை அவர்களின் சீருடைக்கு மேலால் அணிவதற்கும், களைவதற்கும் சந்தர்ப்பம் வழங்குக.
- களைந்த ஆடையை உதறிச் சரியான முறையில் மடித்து வைப்பதற்கு வழிப்படுத்துக.
- உடை அணியும் போதும் களையும் போதும் ஓத வேண்டியவற்றை சரியாக ஓதுகின்றாரா என அவதானிக்க

**கணிப்பீடு** :

- சரியான ஒழுங்கு முறையில் உடையை அணிந்து காட்டுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- உடை அணியும் ஒழுங்குகளை வாழ்வில் பின்பற்றுவார்.

6. தொனிப்பொருள் : அக்லாக் ஆதாத்

**தேர்ச்சி 6** : கூட்டு வாழ்வில் இடம்பெற வேண்டிய பண்புகளையும், விழுமியங்களையும் விளங்கி அதன்படி ஒழுகுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : பிறருக்கு அன்பு காட்டிக் கீழ்ப்படிந்து நடப்பார்.

**கற்றற் பேறு** :

- பெற்றோருக்கு அன்பு செலுத்துவதோடு கீழ்படிந்து நடப்பார்.
- மூத்த சகோதர சகோதரிகளுக்கு அன்பு காட்டிப் பணிந்து நடப்பார்.
- ஆசிரியர்களுக்கும் அன்பு காட்டிக் கௌரவிப்பார்.
- பெற்றோர், மூத்த சகோதர சகோதரிகள், உறவினர்கள், ஆசிரியர்கள் என்பவர்களின் நல் உபதேசங்களுக்குக் கீழ் படிந்து நடப்பதை நாடகம் ஒன்றின் மூலம் வெளிக்காட்டுவார்.

**வளங்கள்** :

- பெற்றோர்க்கும், சகோதரர்களுக்கும் அன்பு செலுத்தும் முறையை வெளிப்படுத்தும் நிழற்படங்கள்.
  இறுவட்டுக்கள்/கதைகள், நிகழ்வுகள்
- அல்குர்ஆன், ஹதீஸ் மேற்கோள்கள் (மொழிபெயர்ப்புடன்)
  உ-ம் :-''ரப்பனா ரப்பி ர்ஹம் ஹுமா கமா ரப்பயானீ ஸஈரா''(குர்ஆன்)
  ''மனிதர்களுக்கு அன்பு செலுத்தாதவர்கள் மீது அல்லாஹ்வும் அன்பு செலுத்த மாட்டான்'' (புகாரி)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செற்பாடு 1** :

- பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் என்பவர்களுக்கு அன்பு செலுத்தும் சந்தர்ப்பங்களைக் கேட்டறிக
- முன் கூட்டியே மாணவர்கள் கொண்டு வந்த நிழற்படங்களை குழுக்களுக்கிடையில் பகிர்ந்தளித்து மகிழ்ச்சியடைய இடமளிக்க.
- பெற்றோர், சகோதர்கள், உறவினர்கள் என்பவர்கள் மூலம் பல உதவிகள் கிடைக்கின்றன என்பதை விளக்குக
  மேலே கூறப்பட்டுள்ள குர்ஆன் ஹதீஸை விளக்குக

**செயற்பாடு 2** :

- கீழ்படிதல் சம்பந்தமான ஒரு சிறிய நாடகம் ஒன்றை உருவாக்கி மாணவர்களை நடிக்க வாய்ப்பளிக்க.
  உ.ம்: - மகனே என்ன செய்கிறீர்?
  - நான் டீச்சர் வழங்கிய வேலையைச் செய்கின்றேன்.
  - மிக நன்று, பிள்ளைகள் அப்படித்தான் ஆசிரியர்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும்

**செயற்பாடு :3**

- ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கு அல்லாஹ்வின் அருளை வேண்டி வாழ்த்து அட்டை தயாரிக்க வழிப்படுத்துக.
- அவ்வாழ்த்து அட்டையை ஆசிரியர்களுக்கு வழங்க வழிகாட்டுக.

**கணிப்பீடு** :

- பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் என்பவர்களின் நல் உபதேசங்களைப் பின்பற்றி நடக்கும் முறையை நாடகம் ஒன்றின் மூலம் வெளிக்காட்டுவார்.
- ஆசிரிய, ஆசிரியைகளுக்கு அன்புடன் ஆசி கூறி வாழ்த்து அட்டையை வழங்குவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை:**

- பெற்றோருக்கும், சகோதர்களுக்கும், உறவினர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அன்பு செலுத்துவார்.

**6. தொனிப்பொருள் : அக்லாக், ஆதாத்**

**தேர்ச்சி 6** : கூட்டு வாழ்வில் இடம்பெற வேண்டிய பண்புகளையும், விழுமியங்களையும் விளங்கி அதன்படி ஒழுகுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : குழு வேலைகளில் ஒத்துழைப்புடன் ஈடுபடுவார்.

**கற்றற் பேறு** :

- வகுப்பறையில் மாணவர்களுடன் சேர்ந்து சிறிய விருந்துபசாரமொன்றை ஏற்பாடு செய்வார்.

**வளங்கள் :**

- பெற்றோரின் ஒத்துழைப்புடன் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருட்கள், மேசை விரிப்பு, மலர்ச் சாடி.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1**

- விருந்துபசாரம் தொடர்பாகக் கலந்துரையாடி அதற்கு தேவையானவற்றைப் பற்றி ஆலோசனைகளை வழங்குக.
- விருந்துபசாரத்திற்கு முன் மாணவர்கள் தாம் விரும்பியவாறு வகுப்பறையை அலங்கரிப்பதற்கு ஆலோசனை வழங்குக.
- வகுப்பறையின் நடுவில் மேசையொன்றை வைத்து அதன் மேல் சுத்தமான விரிப்பை விரித்து பூச்சாடி ஒன்றை வைக்க.
- முன்கூட்டியே அறிவித்தபடி தேவையான உணவுப் பொருட்களைச் சரியான நேரத்தில் எடுத்துவரச் செய்க. (பாத்திரங்களில் இட்டு)
- உணவு உண்ணும் இஸ்லாமிய ஒழுக்க முறைகளைக் கடைப்பிடித்து ஒற்றுமையுடன் தாம் கொண்டு வந்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்பதற்கு வசதி செய்க.
- பின்பு மாணவர்கள் விரும்பிய நடிப்பு, பாடல் என்பவற்றை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக
- அல்லாஹ்வுக்கு நன்றி கூறி உபசாரத்தை நிறைவு செய்க.

**கணிப்பீடு :**

- விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்து மகிழ்ச்சியடைவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- ஒற்றுமையுடன் ஒத்துழைத்துச் செயற்படுவார்.

**7. தொனிப்பொருள் : நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகள்**

**தேர்ச்சி 7** : நபி (ஸல்) அவர்கள் மீது நேசம் கொண்டு அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி நடப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1:** நபி (ஸல்) அவர்களை நேசிப்பார்.

**கற்றற் பேறு** :

- முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறப்புத் தொடர்பான விடயங்களை எடுத்துக் கூறுவார்.
- அவர்கள் மீது நேசம் கொண்டு ஸலவாத்துச் சொல்வார்.
- அஸ்ஸாதிக், அல் அமீன் என்பன முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவப் பெயர்கள் எனக் கூறுவார்.

**வளங்கள் :**

- மஸ்ஜித் நபவி, மக்கா போன்றவற்றின் படங்கள்
- அல்குர்ஆன், ஹதீஸ் மேற்கோள்கள்

உ-ம் : அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபியவர்கள் மீது ஸலாவத்துச் சொல்கிறார்கள். விசுவாசிகளே நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். (அல்குர்ஆன்)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- மஸ்ஜித் நபவி, மக்கா என்பவற்றின் படங்களைக் காட்டி முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறப்புத் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- குறிப்பிடப்பட்ட குர்ஆன் வசனத்தையும் ஹதீஸையும் மாணவர்களுக்கு விளக்குக.

**செயற்பாடு 2 :**

- முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறப்பு மற்றும் சிறு பராயம் தொடர்பாகச் சிந்தனையைத் தூண்டுக.
- முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தொடர்பான சில விடயங்களைத் தெளிவுப்படுத்தி அது தொடர்பாக மாணவர்களுக்கிடையே கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்க.

உ.ம்: **மௌலவி** : அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

**குழு** : வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

**மௌலவி** : நாம் இன்று நபி (ஸல்) அவர்களின் பிறப்புத் தொடர்பான விடையங்களைப் பற்றிக் கதைப்போம். உங்களுக்குத் தெரிந்த விடயங்களைக் கூறுங்கள்.

**மாணவன் 1** : முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவில் பிறந்தார்கள்.

**மாணவன் 2** : முஹம்மத் (ஸல்) அவர்கள் தாய் ஆமினா

ஆவார், தந்தை அப்துல்லாஹ் ஆவார்.

**மாணவன் 3:** அவர் பிறப்பதற்கு முன்பே அவரின் தந்தை வபாத்தாகிவிட்டார்.

**மௌலவி :** சரி, நல்லது. நபி (ஸல்) அவர்களை நாம் நேசிக்க வேண்டும். அவர்களது முன்மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் மீது நாம் ஸலவாத் கூற வேண்டும்.

**கணிப்பீடு :**

- முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பு, சிறு பராயம் தொடர்பான ஏதாவது ஒரு சம்பவத்தைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- அண்ணலாரின் மீது ஸலவாத் கூறுவார்.

## 8. தொனிப்பொருள் : அல்குர்ஆன்

**தேர்ச்சி 8.0** : அல்குர்ஆனைப் பற்றி அறிந்து அதனை ஓதிவருவதுடன் அதன் போதனைகளையும் கடைப்பிடித்து ஒழுகுவார்.

**கற்றற் பேறு** : 8.1

- அல் குர்ஆன் இறக்கப்பட்ட முறையை விளக்குவார்.
- அல் குர்ஆன் நேர்வழி காட்டுகின்றது என்று கூறுவார்.
- புனித நூலான அல்குர்ஆனுக்கு உரிய கௌரவத்தை அளிப்பார்.
- ஸுரதுல் பாத்திஹாவை ஓதுவார்.

**வளங்கள்** :

- அல்குர்ஆன்
- ஸுரதுல் பாத்திஹா அரபியில் எழுதப்பட்ட அட்டை

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- முன்னைய நாளில் மாணவர்களுக்கு குளித்துச் சுத்தமாக வருவதற்கு அறிவுறுத்துக.
- அல் குர்ஆனைச் சுத்தமான விரிப்பின் மீது வைக்க.
- மாணவர்களை வரிசைப்படுத்தி ஒவ்வொருவராக அல்குர்ஆனை எடுத்து மீண்டும் அதே இடத்தில் வைக்கச் செய்க.

**செயற்பாடு 2 :**

- அல் குர்ஆன் நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட முறை பற்றி மாணவருக்குக் கூறுவதற்கு இடமளிக்க.
- அல் குர்ஆன் நேர்வழி காட்டுகின்றது என்பதை எடுத்துக் காட்டுக.
  உ.ம் : ஸலாத், கல்வி, உண்மை உரைத்தல், அனைவருக்கும் உதவுதல், ஏனையோரின் பொருட்களை அனுமதியின்றி எடுக்காதிருத்தல்.......
- முஸ்லீம்களின் புனித நூலான அல்குர்ஆனை கௌரவிப்பதுடன் அதன் போதனைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடுக.

**செயற்பாடு 3 :**

- ஸுறதுல் பாத்திஹா அரபியில் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்துக.
- மாணவர்களுடன் சேர்ந்து ஸுறதுல் பாத்திஹாவை உச்சரித்து ஓதுக.
- இயலுமான மாணவர்களுக்குத் தனியாக ஓதச் சந்தர்ப்பம் வழங்குக.

**கணிப்பீடு :**

- சரியான உச்சரிப்புடன் தனியாக ஸுறதுல் பாத்திஹாவை ஓதுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- அல்குர்ஆனின் போதனைப்படி நடப்பார்.

**9. தொனிப்பொருள் : மஸ்ஜித்**

**தேர்ச்சி 9** : மஸ்ஜித் என்பது முஸ்லிம்களின் புனிதமான இடம் எனக் கூறுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : மஸ்ஜித்களில் பேண வேண்டிய ஒழுக்கங்களைப் பின்பற்றுவார்.

**கற்றற் பேறு** :

- தொழுகை நிறைவேற்றப்படும் மஸ்ஜித் அல்லாஹ்வின் மாளிகை எனக் கூறுவார்.
- மஸ்ஜிதுக்குள் சுத்தமாகச் செல்ல வேண்டும் எனக் கூறுவார்.
- மஸ்ஜிதிலுள்ள முக்கியமான இடங்களைக் கூறுவார் (மிம்பர், மி∴ராப்)

**வளங்கள்** :

- பாடசாலைக்கு அண்மையிலுள்ள மஸ்ஜித்
- மஸ்ஜித்களின் படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1** :

- **பெற்றோரின் ஒத்துழைப்புடன்** மாணவர்களை அருகிலுள்ள மஸ்ஜிதுக்கு அழைத்துச்செல்க
- அதன் முக்கிய இடங்களைக் காண்பிக்க
- மஸ்ஜித் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இலகுவான வினாக்களை வினவுக.
- மஸ்ஜிதில் தொழுகை நடைபெறும் முறை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- மஸ்ஜீதினுள் அமைதி பேணும்படி வலியுறுத்துக.

**செயற்பாடு 2** :

- பலவிதமான மஸ்ஜிதுகளின் படங்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக.
- தொழுகை நிறைவேற்றப்படும் மஸ்ஜித் அல்லாஹ்வின் மாளிகை எனக் கூறுக
- மஸ்ஜிதுக்கு விருப்பத்துடன் செல்வதற்கும், மதிப்பளிப்பதற்கும் வழிகாட்டுக.

**கணிப்பீடு** :

- மஸ்ஜிதில் பேணப்பட வேண்டிய ஒழுங்கு முறைக்கமைவாக நடந்து கொள்வார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**

- மஸ்ஜித்துக்கு ஆர்வத்துடன் செல்வதோடு அதன் புனிதத்துவத்தை பேணிநடப்பார்.

## 10. தொனிப்பொருள் : இஸ்லாமிய வரலாறு

**தேர்ச்சி 10** : இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அறிஞர்களின் செயற்பாடுகளை நயந்து அவர்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடித்து நடப்பார்.

**தேர்ச்சி மட்டம் 10.1** : இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கல்வியில் காட்டிய ஆர்வத்தை அறிந்து பின்பற்றுவார்.

**கற்றற் பேறு** :

- இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் யார் என்பதை எடுத்துக் கூறுவார்.
- அவர் கல்வியில் காட்டிய ஆர்வத்தை எடுத்துக் கூறுவார்.
- கற்பதில் ஆர்வம் காட்டி வருவார்.

**வளங்கள்:** :

- அபூஹாமித் என்பவரின் கதை
- சித்திரம் வரைவதற்குத் தேவையான பொருட்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1** :

- மாணவர்களை நிழலான ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று இருக்கச் செய்க.
- பொருத்தமான முறையொன்றினால் மாணவர்களின் அவதானத்தை ஈர்த்து பாடத்தை ஆரம்பம் செய்க.
- பின்வரும் நிகழ்வை உயிரோட்டமான முறையில் கூறுக.

ஒரு காலத்தில் அபூஹாமித் என்று ஒரு பெரியார் வாழ்ந்தார். அவர் சிறுவராக இருக்கும் போது கற்பதில் அதிக ஆர்வம் காட்டினார். சிலபோது கற்பது அவர் நினைவில் பதிவதில்லை. அப்போது அவர் மிகுந்த கவலை கொள்வார்.

ஒரு முறை அவர் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு தாகம் ஏற்பட்டது. தாகத்தைத் தணிப்பதற்காகக் கிணற்றருகில் சென்றார். கிணறு நிலமட்டத்தோடு இருந்தது. நீர் அள்ளுவதற்கு வசதியாகக் குறுக்கே ஒரு மரக்குற்றி போடப்பட்டிருந்தது. அக்குற்றியில் (நீர் அள்ளும் வாளியின் கயிறு உராய்ந்து) ஓரிடத்தில் வெட்டுப் போன்ற ஒரு பள்ளம் காணப்பட்டது.

இதை அவதானித்த அபூஹாமித் மரக்குற்றியில் பள்ளம் ஏற்பட முடியுமாயின் நான் கற்பது எனது நினைவில் ஏன் பதிய முடியாது என சிந்தித்தார். அதை நினைவுபடுத்தி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார். அதன் பின்னர், அவர் கற்பது நினைவில் பதிய ஆரம்பித்தது. அவர் பிற்காலத்தில் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) என அறியப்பட்டார்.

- நிகழ்வை மையப்படுத்திக் கருத்துப் பரிமாறுக.
- அவரின் முன்மாதிரியைப் பின்பற்றி மாணவர்களும் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும் எனக் கூறுக.

**செயற்பாடு 2:**
- இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் கதையை மீண்டும் நினைவு படுத்துக.

**கணிப்பீடு** :
- இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களைப் பற்றிச் சில வசனங்களைக் கூறுவார்.

**நடைமுறை வாழ்விற்கானவை**
- அல்லாஹ்வின் நாட்டத்துடன் தைரியமாக முன்னேறிச் செல்லல்.

# இஸ்லாம் பாடக் கணிப்பீட்டுப் படிவம்

| | | | | மாணவரின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளார் √ <br> தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை • |
| | | | | 1. பஸ்மலா எழுதப்பட்ட அட்டையை அழகுபடுத்துவதில் ஒற்றுமையுடன் செயற்படுவார். |
| | | | | 2. பஸ்மலா கூறி வகுப்பில் அனைத்து வேலைகளையும் ஆரம்பிப்பார். |
| | | | | 3. அல் இஸ்திஆதாவை திருத்தமாகவும் பூரணமாகவும் உச்சரிப்பார். |
| | | | | 4. தொகுதிகளை வேறாக்கிய கடதாசிக் கீலங்களை இணைத்து அல்ஹம்துலில்லாஹ் என்ற சொற்றொடரைக் கட்டியெழுப்புவார். |
| | | | | 5. லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற சொற்றொடரைச் சரியாக உச்சரிப்பதுடன் தனது ஆசனத்தில் உட்காருவார். |
| | | | | 6. அல்லாஹ்வின் படைப்புக்களுக்கு நன்றி செலுத்திப் பாடலைப் பாடுவார். |
| | | | | 7. சூழல் காட்சியொன்றை வரைவதற்கு உதவுவார். |
| | | | | 8. கலிமதுத் தையிபாவை திருத்தமாக மொழிவார். |
| | | | | 9. வகுப்பறையையும் அயற் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவுவார். |
| | | | | 10. உணவு உண்ண முன்னரும் உண்ட பின்பும் ஓத வேண்டியவற்றை நாளாந்தம் ஓதி இஸ்லாம் கூறும் ஒழுங்கு முறைக்கமைய உணவு உட்கொள்வார். |
| | | | | 11. உடை அணியும் போது அனுசரிக்க வேண்டிய ஒழுங்கு முறையினைக் கடைபிடித்து உடை அணிந்து காட்டுவார். |
| | | | | 12. பெற்றோருடன் சேர்ந்து நற்காரியங்களில் ஈடுபடுவார். |
| | | | | 13. பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், ஆசிரியர்களின் நல் உபதேசங்களுக்குக் கீழ்படிவதை நாடகமொன்றினூடாகக் காண்பிப்பார். |
| | | | | 14. ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கு அல்லாஹ்வின் அருளை வேண்டி வாழ்த்து அட்டை தயாரித்து வழங்குவார். |
| | | | | 15. விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்து சேர்ந்து மகிழ்ச்சியடைவார். |
| | | | | 16. முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறப்பு, சிறு பராயம் தொடர்பான ஏதாவது ஒரு விடயத்தைக் கூறுவார். |
| | | | | 17. குழுவாக ஸூறதுல் பாத்திஹாவை ஓதுவார். |
| | | | | 18 மஸ்ஜிதில் பேணப்பட வேண்டிய ஒழுங்கு முறைகளைப் பேணி நடப்பார். |